**செய்தி வெளியீடு எண் : 951** **நாள்: 11.06.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. பி.சபாநாயகம், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களின் 100-வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு, பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து ஆற்றிய உரை.**

தமிழ்நாடு அரசினுடைய முன்னாள் தலைமைச் செயலாளர் பெருமதிப்பிற்குரிய திரு.சபாநாயகம் அவர்களுடைய 100-வது பிறந்தநாள் விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தின் அமைச்சர் பெருமக்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

முன்னாள் தலைமைச் செயலாளர் திரு.சபாநாயகம் அவருடைய நூற்றாண்டு பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்தில், உங்களோடு சேர்ந்து நானும், தமிழக முதலமைச்சர் என்கிற முறையில் பங்கெடுத்து அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

வாழ்நாளில் எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு பெரிய, அரிய வாய்ப்பாக நான் இந்த நிகழ்ச்சியை கருதிக் கொண்டிருக்கிறேன். தனிப்பட்ட முறையில் எனக்கு மகிழ்ச்சி என்னவென்று கேட்டால், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மூன்று முதலமைச்சர்களிடத்தில் பணியாற்றி இருக்கக்கூடியவர் தான் நம்முடைய நூற்றாண்டு விழா காணக்கூடிய திரு. சபாநாயகம் அவர்கள்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களிடத்தில் பணியாற்றி, 1980 - ஆம் ஆண்டு ஒய்வு பெற்றிருக்கக்கூடியவர். முக்கியமாக நான் சொல்ல வேண்டுமென்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசில் 5 ஆண்டுகள் தலைமைச் செயலாளராக இருந்து இந்த மாநிலத்தினுடைய ஆட்சிப் பணியை, சிறப்பாக எல்லோரும் பாராட்டக்கூடிய வகையில் நிர்வாகத்தை வழி நடத்தியவர் தான் நம்முடைய சபாநாயகம் அவர்கள். அவர் தலைமைச் செயலாளராக மட்டுமல்ல, விஜிலென்ஸ் கமிஷனர், டெவலப்மென்ட் கமிஷனர் ஆகிய பொறுப்புகளையும் பார்த்த, ஆட்சிப் பணி நிர்வாகத்தில் தலைமைப் பண்பிற்கு ஒரு அடையாளமாக விளங்கியவர் நம்முடைய சபாநாயகம் அவர்கள்.

அவருடையை நூற்றாண்டு விழாவில், முதலமைச்சராக இந்த நிகழ்ச்சிக்கு நானும் வருகை தந்து, உங்களோடு சேர்ந்து அவரை வாழ்த்தக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு மிகுந்த பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

அவரிடத்தில் காணக்கூடிய சிறப்பு என்னவென்று கேட்டால், நேர்மை, துணிச்சல், தலைமைப் பண்பு ஆகிய மூன்று இலக்கணங்களுக்கும் அடையாளமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர் தான் நம்முடைய சபாநாயகம் அவர்கள்.

அதனால்தான், இன்றைக்கு அரிதிலும், அரிதான விழாவினை, வாழும் வரலாறாக நம்மிடையே இருக்கும் சபாநாயகம் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் வாய்ப்பு நமக்கெல்லாம் கிடைத்திருப்பது உள்ளபடியே பெருமையாகும்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர் ஒருவரைத் தன் படையில் இணைக்கிறார் என்று சொன்னால், அவர் எத்தகைய வலிமையானவராக இருப்பார் என்பது எல்லாருக்கும் தெரியும். அத்தகைய வலிமை மிக்க ஒரு திறமையான நிர்வாகத்திறன் உள்ளவர் தான் நம்முடைய தலைமைப் பண்புமிக்கவர் தான் திரு.சபாநாயகம் அவர்கள்.

தலைவர் கலைஞருடைய முக்கியமான ஆட்சிக்காலம் 1971 - 76. அப்போது தலைமைச் செயலாளர் பொறுப்பில் இருந்தவர் நம்முடைய சபாநாயகம் அவர்கள். 1976 - ஆம் ஆண்டு கலைஞர் தலைமையில் இருந்த ஆட்சிக் கலைக்கப்பட்டபொழுது சில அதிகாரிகளை திமுக அதிகாரி என்று சொல்லி மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். யாரிடத்தில் என்றால், இங்கு இருக்கக்கூடிய நம்முடைய சபாநாயகம் தலைமைச் செயலாளராக இருந்தபோது சொன்னார்கள். அப்போது என்ன பதில் சொன்னார் என்றால், அனைத்து அதிகாரிகளும், அரசின் அதிகாரிகளே தவிர அரசியல் அதிகாரிகள் அல்ல என்று துணிச்சலாக பதில் சொன்னவர் நம்முடைய சபாநாயகம் அவர்கள். ஒன்றிய அரசின் பணிக்கு சென்றபோது கூட தமிழ்நாட்டிற்குத் திட்டங்களை கொண்டு வருவதில் அதிகமான அக்கறை செலுத்தியவர் நம்முடைய சபாநாயகம் அவர்கள்.

தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், கல்வி, வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் பெருகியது என்று சொன்னால், அடித்தட்டு மக்கள் குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி சிந்தித்தார் என்று அதையும் நம்முடைய சபாநாயகம் அவர்கள் தன்னுடைய புத்தகத்தில் எழுதிக் காட்டியிருக்கிறார்.

திரு. சபாநாயகம் அவர்கள் விடுதலை இந்தியாவின் ஆட்சி இயலில் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்திருக்கக்கூடியவர். விடுதலைக் காலத்திற்கு முன்பு மாவட்ட கலெக்டர் போன்ற பொறுப்புக்களை ‘இம்பீரியல் சிவில் சர்வீசஸ்’ தேர்ச்சி பெற்றவர்கள்தான் ஆற்றுவார்கள். அந்த வகையில், ஐ.சி.எஸ் - ஆகப் பணியாற்றிய சபாநாயகம் அவர்கள், இந்திய விடுதலைக்குப் பின்னர் உருவான, தற்போது ஐ.ஏ.எஸ் என்று நாம் மதிப்போடு அழைக்கும் ‘இந்தியன் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சர்வீஸ்’ - ஆக தேர்வானவர். நூறு வயதைக் கடக்கக்கூடியவர் தான், விடுதலை இந்தியாவின் முதல் ஐ.ஏ.எஸ் பேட்ச். 70 ஆண்டு கால இந்திய ஆட்சிப்பணி வரலாற்றின் வாழும் அடையாளமாக

இன்றைக்கு அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார். தேசப்பற்று மிகுந்த இவர், இராணுவத்தில் பணியாற்றி, பிறகு ஆட்சிப்பணிக்கு வந்தவர். அதனால் அரசு நிர்வாகத்தில் இவரின் இராணுவக் கட்டுப்பாடு தனி முத்திரை பதித்துள்ளது.

தலைமைச் செயலாளர் பொறுப்பு என்பது, ஆட்சிப் பணிக்கு தலைமைப் பீடம். மாநிலத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வழிநடத்துவதும், ஒன்றிய அரசுடன் தொடர்பில் இருந்து மாநில அரசுக்கான நன்மை பயக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றும் பொறுப்பு அது.

அப்படிப்பட்ட பொறுப்பிலே இருக்கக்கூடிய திரு.சபாநாயகம் அவர்களின் ''இராணுவக் கட்டுப்பாடு''மிக்க நிர்வாகம், இந்த மாநிலத்திற்கு எண்ணற்ற நன்மைகளை பெற்றுத் தந்திருக்கிறது. எண்ணற்ற தொழில் வளர்ச்சியைப் உருவாக்கித் தந்திருக்கிறது. வியக்கத்தக்க முன்னேற்றத்தை தமிழ்நாடு பார்த்திருக்கிறது. முக்கியமாக ஒன்று சொல்ல வேண்டுமென்றால், ஒரு தனியார் நிறுவனம் மூடப்படக்கூடிய நிலை ஏற்பட்டபொழுது அது மூடப்பட்டால் 2000 பேர்கள் வேலையை இழப்பார்கள், எனவே அந்த 2000 பேர்களுடைய வாழ்க்கையை காப்பாற்ற சிந்தித்துச் செயல்பட்டவர் நம்முடைய சபாநாயகம் அவர்கள். அப்படிப்பட்டவர் தமிழ்நாட்டிற்காக உழைத்தவர், இன்றும் நம்மோடு இருந்து ஆட்சிப் பணியிலிருப்போர் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இவரது திறமையை நன்கு உணர்ந்த காரணத்தினால் தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு காவல் ஆணையம் ஒன்று அமைத்தபோது அந்தக் காவல் ஆணையத் தலைவராக சபாநாயகம் அவர்களை நியமித்தார்கள். அதன் மூலமாக தமிழ்நாடு காவல்துறை பல பயன்கள் அடைந்திருக்கிறது. நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் தலைவராக ஆக்கினார். தமிழ்நாடு அரசு நிர்வாகம் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்னோடியாக இருந்தது என்று இன்றைக்கு நெஞ்சை நிமிர்த்தி நம்மால் சொல்ல முடிகிறது என்றால் அதற்கு காரணமானவர் நம்முடைய சபாநாயகம் அவர்கள்.

நேர்மை முக்கியம், அதே நேரத்தில் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவை முக்கியம் இவை இரண்டும், அதிகாரிகளுக்கு அவசியம், அதை திரு.சபாநாயகம் போன்றவர்கள் உருவாக்கிய தமிழ்நாடு அரசின் நிர்வாகக் கட்டமைப்பு இன்று இந்திய நாட்டிற்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இளம் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு, திரு சபாநாயகம் போன்றவர்கள் ஒரு பல்கலைக்கழகமாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்திய ஆட்சிப் பணியை மக்கள் பணியாக நினைத்து செயல்படக்கூடியவர் அவர். நூறாண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு அனுபவப் பாடங்களும் அத்தியாயங்களும் இடம் பெற்றிருக்கின்றன. அதனைப் படிக்கும் ஒவ்வொரு இளம் ஐ.ஏ.எஸ் அதிகாரிக்கும் அது வழிகாட்டியாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது.

அப்படிப்பட்ட சிறப்புக்குரிய வரலாற்றுக்குச் சொந்தக்காரரைப் பாராட்டி, அவருடைய திறமைகளைப் புகழ்ந்து இன்றைக்கு அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைந்து உங்களை வாழ்த்துவதே எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாக்கியம் என்று சொல்லி என்னுடைய உரையை இந்த அளவோடு நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in